1984 மார்ச் 26]

கட்டப்படும் என்று சொன்னார்கள். எந்தெந்த மாவட்டங்களில், எத்தனையெத்தனை வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளன? எத்தனை கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே எத்தனை இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் தான் இருக்கின்றன. வேறுகேள்வி போட்டல் ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு என்பதைத் தெரிவிக்கலாம்.

திரு. தி. கா. நல்லப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு ஹட்கோ திட்டத்தின் மூலமாக கட்டும் வீடுகளுக்கான கடன் கூட்டுறவு சங்கத்தில் அவர்கள் தொகை செலுத்தியபின்தான் தரப்படுகிறது. அதனால் மானியத் தொகை கொடுக்கப்படுவது காலதாமதம் ஆவதாகச் சொல்லப்படுகிறது. இதை விரைவுபடுத்த அரசு முன்வருமா? இத்திட்டத்தின்கீழ் இதற்காக தொகை எவ்வாறு ஒதுக்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வீட்டிற்கு ஆகும் மதிப்பீடு 12,000 ரூபாய். இதில் 9,700 ரூ. ஹட்கோவிடமிருந்து கடனாகப் பெறப்படுகிறது. 1,000 ரூ. அரசு மானியமாகத் தருகிறது. மீதமுள்ள 1,300 ரூ. அதனால் பயன் அடையும் விவசாயிகள் செலுத்த வேண்டும். இதுதான் இப்போது நடைமுறையிலுள்ள திட்டம்.

கூலி நெசவாளர்கள் நிறைந்த ஊர்களில் தொழிலியல் நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கும் திட்டம்.

460—*(வினா எண். 21526)—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூலி நெசவாளர்கள் நிறைந்த ஊர்களில் அரசே Industrial Co-operative Society-கள் துவங்க பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டில் எத்தனை நெசவாளர்க் கூட்டுறவுத் தொழிற்சங்கங்கள் துவக்க செயற்குறிப்பு உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) கூலி நெசவாளர் மற்றும் தறியற்ற நெசவாளர்கள் உள்ள பகுதிகளில், சாத்தியமுள்ள இடங்களில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் துவங்கத் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) நடப்பு ஆண்டில் (1983-84)-ல் இதுவரை 13 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் புதிதாக துவக்க செயற்குறிப்பு உள்ளது.

[1984 மார்ச் 26

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இந்த கூலி நெசவாளர்களின் இன்டஸ்டிரியல் கோவாப்பரேடிவ் சொசைடி துவக்குவதற்கு, அந்தக் கூலி நெசவாளர்களுடைய பர்சன்டேஜ் அளவிலோ அல்லது கொள்கை அளவிலோ எங்கே நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே துவக்கலாம் என்ற அளவிலோ அல்லது வேறு எந்த முறையில் இந்தக் கொள்கையை அரசு அனுசரிக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். கூலி நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில், சொந்தமாக தறிகள் இல்லாமல் இருக்கும் நெசவாளர்கள் வாழும் பகுதியில், அவர்களை கூட்டுறவு அமைப்பில் கொண்டுவரவேண்டும் என்ற வகையில் இந்தக் கூட்டுறவு இன்டஸ்டிரியல் வீவர்ஸ் சொசைடி ஆரம்பிக்கப் படுகின்றன. தமிழ்நாட்டில் 146 இடங்களில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 146 சொசைடிகள் ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கூலி நெசவாளர்கள் அதிகமாக உள்ள பரமக்குடி, எமனேஸ்வரம் போன்ற பகுதிகளில் ஏற்கனவே இப்படிப்பட்ட சொசைடிகள் உள்ளனவா, அல்லது புதிதாக ஆரம்பிக்க அரசிடம் திட்டம் அல்லது செயற்குறிப்புள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், டபிள்யூ புதுப்பட்டி, வி. துரைசாமிபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய 3 இடங்களில்தான் புதிதாக கூட்டுறவு முறையில் இத்தகைய சொசைடிகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைந்து இருக்கும் இன்டஸ்டிரியல் கோவாப்பரேடிவ் சங்கங்களுக்கு அரசு ஒதுக்கும் பணம் கட்டிடங்கள், தறிகள் ஆகியவற்றிற்கே சரியாகிவிடுகிறது என்றும், நூல் சாயம் வாங்கி தொழில் நடத்த நிதி வசதி போதுமானதாக இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, இவற்றிற்கு அதிகமான பணம் வழங்கவும், இவைகள் உற்பத்தி செய்யும் துணிகளை வாங்கும் கோவாப்டெக்ஸ் மூலம் உடனடியாக பில் (பணம்) வழங்கவும் அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்த இன்டஸ்டிரியல் கோவாப்பரேடிவ் சொசைடிகளைப் பொறுத்தவரையில், அவைகள் உற்பத்தி செய்வதை முன்னுரிமை கொடுத்து வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டு, அதற்கான பணமும் அவ்வப்போது பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து அவர்களுக்கு எந்தவிதமான பிரச்னையும் இல்லாமல் அரசு பார்த்துக் கொள்ளும்.